REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஆவணி 27உ திங்கள் (12—9—55) ★ ★ வெளியூர்: ஆவணி 28உ செவ்வாய் (13—9—55) [இதழ் 77

குறுக்கெழுத்துப் போட்டி தடைக்குக் கண்டனம்!

செய்யூர், செப். 11—

குறுக்கெழுத்துப் போட்டிகளைக் கட்டுப்படுத்தி, அதிகபட்ச பரிசுத் தொகையை நிர்ணயம் செய்வதென சர்க்கார் கொண்டுவர விருக்கும் சட்டத்திற்கு, குறுக்கெழுத்துப் போட்டியில் கலந்து கொள்ளும் சுமார் 200 பேர்களடங்கிய கூட்டம் ஒன்றில் கண்டனம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அய்தர் அலி என்ற வழக்கறிஞர் ஒருவர் தலைமையில் நடைபெற்ற அந்தக் கூட்டத்தில், 'குற்றமற்ற, அறிவு வளர்க்கும் குறுக்கெழுத்துப் போட்டியைத் தடை செய்வது வருந்தவதற்குரியது—கண்டனத்திற்குரியது' என்று ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

'தமிழ்மொழியில் நிர்வாகம் நடத்திக் காட்டுகிறேன்'

'நிர்வாக அதிகாரியாக நியமித்துப்பார்க்கட்டும்'

'இந்தி மொழி இந்த நாட்டில் எதற்காக?

மயிலை பொதுக்கூட்டத்தில் நெடுஞ்செழியன் அறைகூவல்

"இந்தி மொழியைக் கட்டாயமாகப் புகுத்தமாட்டோம்—என்று, வடநாட்டுத் தலைவர்கள் ஒருவர்பின் ஒருவராகக் கூறி வருகின்றனர்;

"இந்தியைக் கட்டாயமாகத் திணிக்கமாட்டோம்—நேரடியாகத் திணிக்கமாட்டோம்—என்றெல்லாம் கூறிவரும் அவர்கள், மறைமுகமாக இந்தியைப் புகுத்துகின்றனர் என்பதை நாம் காண்கிறோம்;

"இரயில்வே பெயர்ப் பலகைகளில் இந்தி—அஞ்சல் அலுவலகங்களில் இந்தி—அஞ்சல் சாதனங்களில் இந்தி—ரூபாய் நோட்டுகளில் இந்தி என்பது மட்டுமின்றி, 'அஞ்சல் அலுவலக ஊழியர்கள் எல்லாம் இந்தி கற்றுக்கொள்ள வேண்டும்' என்ற உத்தரவு வேறு—இவை போதாது என்று, வெளிவரவிருக்கிற புதிய நாணயங்களுக்குப் பெயரும் இந்தியிலேயே வைக்கப் போகின்றனராம்; இவை எல்லாம், இந்தியை மறைமுகமாகக் கட்டாயப்படுத்துவதாக ஆகாதா? அஞ்சல் நிலையத்தில் பணிபுரிய வேண்டும் என்று விரும்புபவர்கள் எல்லாம் இந்தி கற்றுக் கொள்ள வேண்டுமென்று உத்திரவிடுவது கட்டாயமல்லவா?

"இவைகளைப்பற்றி இங்குள்ள மந்திரி சபை என்ன நினைக்கிறது? வடநாட்டுத் தலைவர்கள், இந்தியைக் கட்டாயமாகப் புகுத்தமாட்டோம்—என்று கூறுகிறார்களே, அதையே இவர்களும் கூறப்போகின்றனரா?

"புண் புரையோடிக்கொண்டிருக்கும்போது, 'இல்லை—புரையோடவில்லை' என்று கருதிக்கொண்டு வாளாவிருந்துவிட்டால், நாளை, புண்ணை ஆற்றுவதற்குப் பதில் புண் ஏற்பட்ட கையையோ, காலையோ வெட்டி எடுக்க நேரிடும் என்பதை உணர வேண்டாமா? புண் புரையோடுவதைப்போலத்தானே இன்று, இந்தி மொழி தேவையில்லாத தமிழ்நாட்டில் இந்தி கொஞ்சம் கொஞ்சமாக நுழைந்துவருகிறது என்பதை சர்க்காரும், மக்களும் உணர வேண்டும்;

"தமிழ்நாட்டில் இந்தி மொழி எதற்காக? ஆங்கிலம் எப்படி தமிழர்களுக்கு அன்னிய மொழியோ அதுபோலத்தான் இந்தியும் அன்னிய மொழியாகும்;

"இந்தி மொழி என்ன அவசியத்திற்காகத் தமிழ்நாட்டில் புகுத்தப்பட வேண்டும்?

"தமிழ் மொழியில் தமிழ்நாட்டு நிர்வாகத்தை நடத்த முடியாதா?

"கிராமத்தில் உள்ள கர்ணம், பட்டாமணியத்திடம் தமிழ் மொழியிலேயே எழுதிக்காட்டவும், பேசவும் முடியும்; அதுபோல பட்டாமணியம் ரெவினியூ இன்ஸ்பெக்டரிடமும், அவர் தாசில்தாரிடமும், தாசில்தார் உதவி கலெக்டரிடமும், உதவி கலெக்டர் கலெக்டரிடமும், அவர் சர்க்கார் செயலாளர்களிடமும், அவர்கள் மந்திரிகளிடமும் தமிழிலேயே பேசவும், எழுதிக்காட்டவும் முடியும்; கிராமக் கர்ணத்திலிருந்து காமராசர்வரை தமிழ் மொழியால் நிர்வாகம் நடத்த முடியும்; அப்படியிருக்க இந்தி மொழி இங்கு புகுத்தப்பட வேண்டிய அவசியமென்ன? வடநாட்டுக்காரர்களின் ஆதிக்கத்திற்காகவன்னியில் வேறெதற்காக இந்தி இங்கு தேவை?

"திருச்சியில் தமிழ் மொழியில் நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டதாகவும், அது வெற்றிகரமாக நடைபெறவில்லை என்றும் மந்திரி பக்தவத்சலம் வெட்கமில்லாமல் தெரிவித்திருக்கிறார்;

"தமிழ் மொழியில் அரைகுறை அறிவு பெற்றவர்களையும், ஆந்திர, மலையாள அதிகாரிகளையும் கொண்டு தமிழ் மொழியில் நிர்வாகம் நடத்தச் சொன்னால் எப்படி தமிழ் மொழி நிர்வாகம் வெற்றிகரமானதாக நடைபெற முடியும்?

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

வடவரின் ஆதிக்க வெறி!

தங்கவயல் தேசீயமயமாவதில் குறுக்கீடு?

மைசூர் மந்திரிசபை விலகிவிடும்?

பெங்களூர், செப். 9—

மைசூர் மாநிலத்தில் உள்ள கோலார் தங்கவயல் தேசியமயமாக்கப்படுவது நிச்சயமாகிவிட்டது என்றும், அதற்கான மசோதா கூடத் தயாராகிவிட்டது என்றும் தெரியவருகிறது.

வடநாட்டு ஆதிக்க வெறியர்கள், தங்கவயல் தேசியமயமாவதைத் தடுக்கத் திட்டமிட்டிருப்பதாயும் கூறப்படுகிறது.

மைசூர் முதன் மந்திரி அனுமந்தையா, சில நாட்களுக்குமுன் எவரேனும் தங்களது அதிகாரத்தால் தங்கவயல் தேசியமயமாவதைத் தடுக்க முற்பட்டால், தனது மந்திரிசபை பதவியினின்றும் விலகும் என்று அறிவித்ததை இதற்கு ஆதாரமாகக் கொள்ள முடியும் என்றும் விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வட நாட்டு ஆதிபத்திய வெறியர்கள் தங்களின் போக்கில் விடாப்பிடியாக இருக்க நேர்ந்தால், நிச்சயம் அனுமந்தையா மந்திரிசபை அதனை எதிர்த்து பதவியினின்று விலகுவது உறுதியாகிவிட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்தியப் பேரரசில் உள்ள யூகம் படைத்த சிலர், இத்தகு ஒரு நிலை உருவாகாமல் தடுக்கும் நோக்குடன் தங்கவயலை தேசியமயமாக்கும் மைசூர் சர்க்காரின் திட்டத்திற்கு ஒத்துழைப்பு நல்குவதே நலமானது என்று கருதுகின்றனராம்.

இந்தியப் பேரரசும் அனுமந்தையாவின் எச்சரிக்கைக்குப் பிறகு தனது ஆதிக்க வெறியை மட்டுப்படுத்திக்கொள்ள முனையும் என்றும் அறியக்கிடக்கிறது.

எழுபத்தைந்து ஆண்டுகளாகப் பிரிட்டிஷாரின் பிடியில் இருந்துவரும் இந்தக் கோலார் தங்கவயலை தேசியமயமாக்குவதற்காகச் சுமார் இரண்டு கோடி ரூபாய்க்குமேல் நஷ்டஈடாகத் தர வேண்டியிருக்குமென்றும், ஏராளமான உயர்தரத் தொழில் நுணுக்க அறிவு பெற்ற நிர்வாகிகள், தொடர்ந்து தொழில் நடத்துவதற்காகத் தேவைப்படுவர் என்றும் கூறப்படுகிறது.

மசோதா சட்டசபைக்கு வரும்போது, எல்லாக் கட்சியினரின் ஒருமுகமான ஆதரவு அதற்குக் கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறதாம்.

பராபோல் அணைக்கட்டு

இரண்டாம் திட்டத்தில் இடம் பெறுகிறது

பெங்களூர், செப். 10—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் கூர்ஜர மாநில சர்க்கார் தயாரித்த ரூ. 16 கோடி பெறுமான பராபோல் மின்சார நீர்ப்பாசன அணைக்கட்டுத் திட்டத்தைச் சேர்த்துக்கொள்வதென இந்தியப் பேரரசு முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

இந்த திட்டத்தின்படி, 1,80,000 கிலோவாட் மின்சார உற்பத்தி செய்ய முடியும் என்றும், 30,000 ஏகருக்கு நீர்ப்பாசன வசதி பெற முடியும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

1,700 பேர் பலியாம்!

கல்கத்தா, செப். 10—

சென்ற ஆண்டில் மட்டும், மேற்கு வங்கத்தில் 1,500 பேர்களுக்குமேல் பாம்பு கடிக்குப் பலியாகியுள்ளனராம்!

1951-ம் ஆண்டில் 1,471 பேர்களும், 1953-ம் ஆண்டில் 1,711 பேர்களும் பாம்புக் கடியால் மாண்டனரென்று மாநில சட்டசபையில் சுகாதார அமைச்சர் அறிவித்தார்.

நேருவின் உபதேசம் பெறும் பதில்!

பாட்னா மாணவர்கள் மீண்டும் வேலை நிறுத்தம்!

சட்டசபை முன் ஆர்ப்பாட்டமும் செய்வர்

கொல்லப்பட்டவரின் பெயரால் கல்லூரி திறக்கக் கோரிக்கை

பாட்னா, செப். 11—

மீண்டும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது என்றும், நாளை பிகார் சட்டசபை துவங்கும்போது சட்டசபை முன் ஆர்ப்பாட்டம் செய்வது என்றும், பிகார் மாணவர்கள் செயற் குழு முடிவு செய்திருக்கிறதாம்.

போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததினால் இறந்துபட்டவர்களின் அடுத்த உறவினருக்கு நஷ்டஈடு தரவேண்டும்—துப்பாக்கிப் பிரயோகம் செய்த அதிகாரிகளை விலக்க வேண்டும்—தேவையானால் நீதிமன்ற விசாரணை நடைபெறும் வரை அவர்களுக்கு லீவு தந்து, பதவியிலிருந்து விலகியிருக்கச் செய்ய வேண்டும்—மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தை ஒட்டி, நாடெங்கும் கைது செய்யப்பட்டவர்கள் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டும் என்பன போன்ற தங்களின் கோரிக்கைகளை வலியுறுத்துவதற்காகவே, மாணவர்கள் மீண்டும் வேலை நிறுத்தம் செய்யவும், சட்டசபை முன் ஆர்ப்பாட்டம் செய்யவும் முடிவெடுத்திருக்கின்றனராம்.

செப். 12-ந் தேதியன்று பகல் 2 மணிவரையில், பாட்னா நகர் முழுதும் பொது வேலை நிறுத்தம் செய்ய வேண்டும் என்றும் மாணவர்கள் செயற் குழு முடிவெடுத்திருக்கிறதாம்.

மாணவர்கள் செயற் குழுவிற்கு போட்டிச் சங்கமாக விளங்கும் மாணவர்கள் க்ஷேமநல சங்கம், செப். 12-ந் தேதியன்று வேலை நிறுத்தமோ, ஆர்ப்பாட்டமோ கூடாது என்றும், ஏனெனில், பல்கலைக் கழக வேந்தர் தங்கள் கோரிக்கைகள் பற்றிக் கவனிப்பதாக உறுதிமொழி தந்திருக்கிறார்—ஏற்கனவே கோரிக்கை ஏற்கப்பட்டுவிட்டது—என்று தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

கடந்த ஆகஸ்டு 12-ந் தேதி துப்பாக்கிப் பிரயோகத்தால் கொல்லப்பட்ட தீனநாத் பாண்டே என்பவர் பெயரால், பாட்னா நகரில் ஒரு கல்லூரி திறக்க, சர்க்கார் முன்வர வேண்டும் என்றும், அந்த மாணவர் க்ஷேம நல சங்கம் தீர்மானித்திருக்கிறதாம்.

நெய்வேலித் திட்டத்திற்கு முழு நேர அதிகாரி

சென்னை சர்க்கார் கைத்தொழில் இலாகாவின் காரியதரிசியாக சமீப காலம்வரை இருந்த டி. எம். எஸ். மணி, நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டத்திற்கான முழுநேர நிர்வாக அதிகாரியாக விரைவில் நியமிக்கப்படுவாராம்.

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 12—9—'55 திங்கள்

மலேயா சுதந்திரம்!

"மலேயா, வெள்ளையரின் ஆதிக்கப் பிடிப்பிலிருந்து முழுவதுமாக விடுபட்டு பூரண சுதந்திரம் பெற்ற நாடாகத் திகழ வேண்டும்; இன்னும் நான்காண்டு காலத்திற்குள் வெள்ளையர்கள் மலேயாவிற்குச் சுதந்திரம் வழங்கிவிட வேண்டும்" என்று, அண்மையில் நடைபெற்ற முதல் தேர்தலில் பெரும் வெற்றி பெற்ற முக்கூட்டுக் கட்சித் தலைவரும், முதன் மந்திரியுமான தெங்கு அப்துர் ரஹ்மான் சென்ற கிழமையில் அறிவித்திருக்கிறார்.

அவரும், அவர் தலைவராயிருக்கிற முக்கூட்டுக் கட்சியினரும் தேர்தலில் போட்டியிடுகிற காலத்திலேயே—"மலேயாவில் 'பயங்கரவாதி'களை ஒடுக்குவதற்கு என்று கூறி வெள்ளையர்கள் பிரகடனம் செய்துவைத்திருக்கும் 'அவசர நிலை'யை ஒழித்து, நாட்டில் எல்லோரும் பாதுகாப்புடன் உலவ வழி செய்வோம்; பயங்கரமான அடக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டு வேட்டையாடப்படுகிற — காடுகளிலும், புதர்களிலும் ஒளிந்து திரிந்து வாழுபவர்களுக்கு மன்னிப்பு வழங்குவோம்; அவர்கள் நாடு திரும்ப வழி வகுப்போம்"— என்று, தேர்தல் உறுதிமொழிகளுள் ஒன்றாகத் தெரிவித்துவந்தனர்.

அந்த முறையில் தேர்தலில் மகத்தான வெற்றி பெற்று, சட்டசபையில் பெருவாரியான பிரதிநிதித்துவ இடங்களைக் கைப்பற்றி மந்திரி சபை அமைத்திருக்கிற முக்கூட்டுக் கட்சியினர், இப்போது, 'பயங்கரவாதி'கள் என்று வெள்ளையர்களால் வர்ணிக்கப்பட்டவர்களுக்கு 'மன்னிப்பு' வழங்கியிருக்கின்றனர்; 'அவர்களைப் பழி வாங்குவதில்லை; அவர்கள் நாடு திரும்பி, மக்களோடு மக்களாக—எல்லா உரிமைகளையும், எல்லோரைப்போலவும் பெற்று வாழலாம்' என்று உறுதிமொழி தந்திருக்கின்றனர்.

முதன் மந்திரியான தெங்கு அப்துர் ரஹ்மான், அண்மையில் மந்திரி சபை அமைத்துப் பொறுப்பேற்றதும் மேற்கொண்ட முக்கியமான நடவடிக்கைகளுள் முதலாவது, மலேயாவின் முழுச் சுதந்திரத்திற்கு நாள் குறித்தது; இரண்டாவது, 'பயங்கரவாதிகள்' என்று வர்ணிக்கப்பட்டு வேட்டையாடப்பட்ட மனிதர்களுக்கு 'அபயம்' அளித்தது.

இந்த இரண்டாவது நடவடிக்கைக்காகப் பிரிட்டிஷ் காலனி மந்திரி லெனுக்ஸ் பாயிட் என்பாருடன் பேச்சுவார்த்தை நடத்தி வெற்றியும் பெற்றிருக்கிறார்.

'சர்க்கார் 'அவர்களை'ப் பழிவாங்கப் போவதில்லை— 'அபயம்' அளித்திருக்கிறது,' என்ற விபரத்தை, விடுதலைக்காகப் 'புரட்சி'ப் பாதையை மேற்கொண்டிருந்தவர்கள் தங்கியிருக்கும் குகைகளிலும், புதர்களிலும், காடுகளிலும் துண்டுப் பிரசுரங்களை விமானங்கள் மூலம் விநியோகித்திருக்கிறார்கள்; காடுகளில் மறைந்து வாழ்வோரின் எண்ணிக்கை சுமார் நாலாயிரம் இருக்கலாம் என்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

தெங்கு அப்துர் ரஹ்மான் இந்த நடவடிக்கையை மேற்கொண்டபோது, "மலேயாவின் முழு சுதந்திரத்திற்கான முதல் படிக்கட்டில் நாம் இருக்கிறோம்; முழுச் சுதந்திரம் பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபடும்போது, காடுகளிலிருப்போர், முன்பு போலவே பலாத்காரச் செயல்களில் ஈடுபடுவது, சுதந்திரப் பாதையில் தடைக் கற்களைப் பரப்புவதாக அமையும்; முழுச் சுதந்திரம் பெறுவதற்கு, முதலில், நாட்டில் அமுலாகிவரும் நெருக்கடி நிலை ஒழிந்தாக வேண்டும்; அந்த நிலை ஒழிக்கப்படுவதற்கு நாம் இப்போது தந்திருக்கிற 'அபய'த்தைப் பயன்படுத்திக் கொண்டு, காடுகளில் மறைந்து வாழ்வோர் நாடு திரும்பியாக வேண்டும்; எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரம் நாட்டில் நிலவும் நெருக்கடி நிலை ஒழிக்கப்படுகிறதோ அத்தனை சீக்கிரம் மலேயாவின் முழுச் சுதந்திரக் கோரிக்கை வெற்றி பெறுவது சாத்தியமாகும்; இந்த வேண்டுகோளை காட்டில் மறைந்து வாழ்வோர் ஏற்றுக்கொண்டு நாடு திரும்புவது தான், அவர்கள் எந்த நோக்கத்திற்காகப் பாடுபடுவதாகக் கூறுகின்றனரோ, அந்த விடுதலையைப் பெறுவதற்கு உதவக் கூடிய செயலாகும்; இல்லாமற்போனால், தொடர்ந்து, மலேயா, பிரிட்டிஷாரின் ஆதரவுடன்தான் இயங்க வேண்டி வரும்; வெள்ளையரின் ஆதிக்கத்தின் கீழ்தான் அவதியுற நேரிடும்," என்று உருக்கமாகத் தெரிவித்திருக்கிறார்.

பொதுவாகவே, மலேயா மக்களில் பெரும்பாலானோர், தெங்கு அப்துர் ரஹ்மானின் கருத்தையே ஆதரிப்பதாகவும் கூறப்படுகிறது.

'தீவிர வாதிகளாயிருப்போர் தெங்கு அப்துர் ரஹ்மான் தந்திருக்கிற — 'நாலாண்டுக் காலத்தில் மலேயாவிற்கு சுதந்திரம் பெற்றுத் தருவேன்'— என்ற உறுதிமொழியை, அவர் நிறைவேற்றித் தருகிறாரா என்று பார்ப்பதற்கேனும், ரஹ்மான் அளிக்கும் 'அபயத்'தை ஏற்றுக்கொண்டு நாடு திரும்பி, எல்லா மக்களையும்போல, சுதந்திரத்திற்காக, ரஹ்மான் சர்க்கார் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்குப் பூரண ஆதரவு தர வேண்டும்'—என்று மலேயர் மக்களில் மற்றொரு பகுதியினர் கருதுவதாகவும் தெரிகிறது.

'உலகத்தில் அடிமைப்பட்டவர்கள் விடுதலை பெறுவதற்காக உள்ள வழிகளில் எது சிறந்தது என்ற சிந்தனையோடு, அப்துர் ரஹ்மான் சர்க்காரின் நடவடிக்கையைப் பரிசீலித்துப் பார்க்கவேண்டும்—மலேயா தீவிரவாதிகள் என்று, விடுதலை விரும்பிகள் எண்ணுகின்றனர்.

தீவிரவாதிகள், மலேயா சர்க்காரின் நடவடிக்கைக்குத் தரும் பதிலையும் பொறுத்துத்தான் மலேயா முழுச் சுதந்திரம் பெறுவது இருக்கிறது.

மைசூரின் இரண்டாம் திட்டம்

ரூ. 252 கோடி மதிப்புடையது

அபிவிருத்திக் குழு பரிசீலனை

பெங்களூர், செப் 9—

மைசூருக்கான இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட நகல் இப்போது மைசூர் திட்ட அபிவிருத்திக் குழுவின் பரிசீலனையிலிருப்பதாகவும், சுமார் ரூ. 251 72 கோடி செலவிட திட்டம் உத்தேசிப்பதாகவும் தெரியவருகிறது.

திட்டப்படி கீழ்க்கண்ட துறைகளுக்குப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது:—

விவசாயம்	ரூ.	36,48,99,000
நீர்ப்பாசனம்,		
மின்சாரம்	ரூ.	14,72,53,000
தொழில்	ரூ.	42,47,37,000
போக்குவரத்து	ரூ.	14,25,00,000
கல்வி	ரூ.	39,82,53,000
சுகாதாரம்	ரூ.	23,37,85,000
வீட்டு வசதி	ரூ.	13,86,53,000
சமூக நலன்	ரூ.	4,91,48,000
இதரவை	ரூ.	1,79,88,000

சர்க்காரின் பல துறைகளுக்குமாக, இந்த அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

ஐதராபாத் திட்டம்: ரூ. 113 கோடி மதிப்பு

ஐதராபாத், செப். 9—

ஐதராபாத் மாநிலத்தின் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் மதிப்பீடு ரூ. 113 கோடி என தேசிய திட்டக் குழு நிர்ணயித்திருக்கிறது.

ஐதராபாத் முதன் மந்திரி இராமகிருஷ்ணராவ், திட்டக் குழுவிடமும், மத்திய அரசாங்கத்திடமும் இது குறித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்திவிட்டுத் திரும்பியதும் இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

விலையைக் குறைப்பதற்கு யோசிக்கிறார்களாம்!

புதடில்லி, செப். 9—

இரசாயன உரங்களின் விலையைக் குறைக்க முடியுமா என்று சர்க்கார் யோசிப்பதாகவும், ஆனால், மானியம் எதவும் கொடுக்கும் நோக்கம் சர்க்காருக்குக் கிடையாது என்றும் மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

குடும்ப வாழ்க்கையில் சுமூக உறவு நிலவுமா?

கண்டுபிடிக்க ஒரு கருவி!

திருமணம் செய்துகொள்ள ஒரு ஆணும் பெண்ணும் விரும்பினால், அவர்களுடைய குடும்ப வாழ்க்கை சுமூகமாகஇருக்குமா என்பதைக் கண்டுபிடித்துச் சொல்லும் கருவி ஒன்று, இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய இரயில்வேக்களில் உபயோகிக்கப்பட்டுவரும் புதிய மூன்றாவது வகுப்பு இரயில் பெட்டிகளில் நீல நிற விளக்கும் பொருத்தப்பட்டிருக்குமாகையால் இரவு நேரங்களில் பிரயாணிகளுக்குப் பூச்சித் தொல்லைகள் இருக்கமாட்டா.

பள்ளிக்கூடங்களில் சினிமா பட இரசனையையும் ஒரு பாடமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும், சினிமாப் பட சங்கங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும், படங்கள் மூலம் பாட போதனைக்கான தேசீய போர்டு செய்தள்ள சிபாரிசுகளை இந்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

4,430 பேர் மனுச் செய்தனர்; 193 பேர் மட்டுமே பதிவாயினர்

குடி உரிமை மனுக்கள் பற்றி புள்ளி விபரம்

கொழும்பு, செப். 9—

1955 ஜூலையில், இந்தியரின் குடி உரிமை மனுக்களின் மீது முடிவு செய்யப்படும் போக்கு பற்றி புள்ளி விவரங்கள் பேசுகின்றன:—

குறிப்பிட்ட மாதத்தில் 193 பேர் அடங்கிய 47 மனுக்கள் அனுமதிக்கப்பட்டன; ஆனால், 4,430 பேர் சம்பந்தப்பட்ட 1,449 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன — அதாவது, ஒரு மனுவை ஏற்றால், 18 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. வேறு 33 மனுக்கள் முடிவு செய்யப்படாமலேயே இருந்துவிட்டன.

ஜூலை மாதத்தில் குடி உரிமை பெற்றவர்களைச் சேர்த்து, இது வரையில் இலங்கைக் குடிகளாகப் பதிவு செய்யப்பட்டிருக்கும் இந்தியர்களின் மொத்த எண்ணிக்கை 33 9878; நிராகரிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1,53,568 ஆகும்.

8 இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் மனு செய்துகொண்டனர்.

உணவு விலை அதிகம் தானும்!

அமைச்சரே ஒப்புகிறார்

புதுடில்லி, செப். 9—

ராஜ்யங்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், இரயில்வே உதவி மந்திரி அழகேசன், இரயில்வே சிற்றுண்டிச் சாலைகளில் விற்கப்படும் உணவுகள் விலை கொஞ்சம் அதிகம்தான் என்று ஒப்புக்கொண்டுள்ளார்.

உணவு வண்டிகளில் விற்கப்படும் சாப்பாட்டின் விலையைத் திருத்தி அமைப்பது பற்றி பரிசீலனை செய்வதாயும், இரயில்வேக்களில் 'மலிவான உணவுப் பொட்டலங்கள்' விற்பனை விரைவிலேயே ஆரம்பமாகுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

'ஒன்று சேருமா'— அமைச்சர் ஆவல்

இந்தியாவில் இப்போது, அங்கீகரிக்கப்பட்ட 13 இரயில்வே தொழிலாளர் சங்கங்கள் இருக்கின்றனவாம்; ஒவ்வொரு இரயில்வேயிலும் ஒரே ஒரு தொழிலாளர் யூனியன் இருப்பதை சர்க்கார் வரவேற்குமென்றும், தொழிலாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த அவை யாவும் ஒன்றுசேர்ந்துவிட்டால் நலமாயிருக்குமென்று தான் நம்புவதாகவும், மக்கள் சபையில், அமைச்சர் அழகேசன் அறிவித்துள்ளார்.

மின்சாரக் கட்டணம்

உழவர்களுக்குக் குறைக்கப்படும்; மற்றவர்களுக்கு உயர்த்தப்படும்!

சென்னை, செப் 8—

வீடுகளுக்கும், கைத்தொழில்களுக்கும் விநியோகம் செய்யப்படும் மின்சாரக் கட்டண விகிதங்களை உயர்த்தி, விவசாயிகளுக்கு மின்சார விநியோக கட்டணத்தைக் குறைப்பதுபற்றி சர்க்கார் பரிசீலனை செய்து கொண்டிருப்பதாக சென்னை மராமத்து இலாகா அமைச்சர் அறிவித்துள்ளார்.

ஐ. நா. பொதுச் சபைக் கூட்டம்

மாஸ்கோவில் நடைபெறும்?

நியூயார்க், செப். 10—

"ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையின் 1956-ம் ஆண்டு கூட்டத் தொடர், ரஷ்யத் தலைநகரான மாஸ்கோவில் துவங்கலாம்," என்று. ஐ நா.-வில் லத்தீன் அமெரிக்கக் கோஷ்டித் தலைவரான டாக்டர் ஜோஸ்-வின்செண்ட் என்பார் தெரிவித்திருக்கிறார்.

என்றாலும், சோவியத் ரஷ்யா அப்படி அறிவித்திருக்கிறதா என்பது தனக்குத் தெரியாது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

யுத்த இரகசியம் அம்பலமாகிறது!

பெர்லினை 'கோட்டை'விட்ட அமெரிக்கர் பற்றி சர்ச்சில்

"கடந்த மகாயுத்தத்தின்போது என் வேண்டுகோளின்படி அமெரிக்கா நடந்திருந்தால், பெர்லின் நகரம் முழுவதையும் மேற்கு வல்லரசுகள் பிடித்திருக்க முடியும்," என்று, பிரிட்டனின் முன்னாள் பிரதமர் சர்ச்சில் குறிப்பிட்டார்.

"ஜெர்மனிமீது படையெடுத்த மேற்கத்திய இராணுவத்தின் இடது பாரிசத்தைப் பலப்படுத்துமாறு நான் எவ்வளவோ கேட்டும் அமெரிக்கா இணங்கவில்லை," என்று அவர் சொன்னார்.

"என் யோசனைப்படி நடந்திருந்தால் இப்போது ரஷ்யாவை சமாளிப்பது எளிதாகியிருக்கும்," என்றும் சர்ச்சில் குறிப்பிட்டார்.

முதலாளிகளுக்குக் கடன் கொடுக்கும் தொழிலாளர்கள்!

சின்னட்டி (ஓஹியோ), செப். 9—

ஹாமில்டன் தையல் கம்பெனியில் வேலை செய்யும் 500 பேர், தங்கள் முதலாளிகளுக்கு ஒரு இலட்சம் டாலர் கடன் கொடுக்கின்றனர்.

அண்மையில் அந்தக் கம்பெனி சில இயந்திரங்கள் வாங்கியதால் பணம் வேண்டியிருந்தது; அப்பணத்தைக் கடனாகக் கொடுப்பதென தொழிலாளர்கள் தீர்மானம் செய்திருக்கின்றனர்.

இந்த வாரம் முதல் ஒவ்வொரு தொழிலாளரும், தங்கள் சம்பளத்திலிருந்தும் பத்து சதவிகிதத்தைக் குறைத்துக் கொண்டு, அதனைக் கடனாகத் தருவார்கள்

மாதத்திற்கு 10,000 டாலராகக் கம்பெனி கடனைத் திருப்பிக் கொடுக்கும்.

தொழிலாளர் கொடுக்கும் தொகைக்குக் கம்பெனி நூற்றுக்கு மூன்றரை வீதம் வட்டி கொடுக்கும்.

மக்கள் சபை உறுப்பினர்களுக்கு

மருத்துவ வசதி!

புதுடில்லி, செப் 9—

மக்கள் சபை நடைபெறும் காலத்தில் உறுப்பினர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் மருத்துவ வசதிக்கான திட்டம் ஒன்றை, மத்திய சுகாதார அமைச்சர் இலாகா தயாரித்திருக்கிறதாம். சுகாதார சேவைத் திட்டத்தில் உறுப்பினர்கள் சந்தாதாரராகச் சேர்ந்து, மாதந்தோறும் ரூ 5 அல்லது ரூ 6 செலுத்த வேண்டுமென்ற ஏற்பாட்டில் இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாம்.

'சுதந்திரப் போராட்ட' புரட்சிக்காரர் கைது?

கான்பூர், செப். 9—

கடந்த 13 ஆண்டுகளாகத் தலைமறைவாக இருந்துவந்தவரும், 1942-ம் ஆண்டு சுதந்திரப் போராட்டத்தின்போது நாசவேலைகள் செய்ததாகக் கருதப்படுபவருமான கங்கா நாராயண் என்பவர் இப்போது கைது செய்யப்பட்டுள்ளாராம்.

1942-ல், டெலிபோன் கம்பிகளையும், இரயில்வே தண்டவாளங்களையும் அவர் துண்டித்தாராம்!

கழகச் செய்திகள்

தஞ்சை மாவட்டச் செயற் குழுக் கூட்டம்

28—8—55 காலை 11 மணியளவில், முத்துப்பேட்டை கிருஷ்ணா டாக்கீசில், தோழர் என். எஸ். இளங்கோ தலைமையில் நடைபெற்ற தஞ்சை மாவட்டச் செயற் குழுக் கூட்டத்தில், பொதுக் குழு உறுப்பினராகத் தோழர் முத்துப்பேட்டை என். தர்மலிங்கம் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பின்னர், தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற 8 வட்டக் கழகங்களின் செயலாளர்களை, தஞ்சை மாவட்டச் செயற் குழு உறுப்பினர்களாக அங்கீகரித்தும், நெடுங்காடு, பாலையக்கோட்டை, நீடாமங்கலம், நல்லூர், சீர்காழி, ஆகிய ஐந்து கிளைக் கழகங்களையும் மாவட்டக் கழகத்தில் பதிவு செய்துகொள்வதோடு, பதிவுக்காக வந்திருக்கிற பிற கழகங்களின் சந்தாப் பணம் அனுப்பியது உறுதி செய்யப்பட்ட பின்னரே மாவட்டக் கழகத்தில் பதிவு செய்து கொள்வது என்றும் மாநில மாநாட்டு நிதிக்காக தஞ்சை மாவட்டத்தின் சார்பில் ரூ. 2,001 சேர்த்து பொதுச் செயலாளரிடம் வழங்கியமைக்காக மாவட்டச் செயலாளரைப் பாராட்டுவதுடன், மீண்டும், தராத கிளைகளிடம் கோட்டாப்படி நிதி வசூலித்து மாவட்டக் கழகத்திலிருந்து கொடுக்கப்பட்டிருக்கிற நிதிக்குச் சரிக்கட்டிக்கொள்வதெனவும், கோவா, டையூ, டாமன் ஆகிய பிரதேசங்களை தன் ஆதிக்கப் பிடியின் கீழ் இன்னமும் போர்ச்சுகீசியர் வைத்துக் கொண்டிருக்கும் அடாத செயலைக் கண்டு வருந்துவதுடன், உடனடியாக அப்பிரதேசங்களை விடுவித்து அங்கு அமைதியை நிலைநாட்ட எல்லாவிதமான நடவடிக்கைகளையும் இந்தியப் பேரரசு மிகத் துரிதமாக எடுத்துக் கொள்ள வேண்டுமென வற்புறுத்துவதுடன், கோவா போராட்டத்தில் உயிர் துறந்த வீரர்களுக்கு வீர வணக்கம் செலுத்தியும், கோவா விடுதலைப் போராட்டத்தில் அனுதாபம் தெரிவிக்கும் முறையில் கண்டன ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள், கடை அடைப்பு முதலிய நிகழ்ச்சிகளில் பங்கேற்ற கிளைகளைப் பாராட்டுவதோடு, கட்டுப்பாடு, கண்ணியம் தவறாது ஆங்காங்கு கிளைகள் ஊர்வலங்கள், கூட்டங்கள் நடத்தியும், தீர்மானங்கள் போட்டும் மக்களுக்கு நிலைமையை எடுத்துவிளக்கஎல்லாக் கிளைகளையும் கேட்டுக்கொண்டும், தி மு. கழகத் துணைப் பொதுச் செயலாளராகத் தோழர் என். வி. நடராசன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதைப் பாராட்டுவதுடன், அவர் கருத்து வழி நின்று இக்குழு பணியாற்றும் என்ற உறுதியையும் தெரிவித்துக் கொண்டும், இம் மாவட்டத்தைச் சார்ந்த காரைக்கால் பகுதியும், அதனுடன் இணைந்த பாண்டிச்சேரி பகுதியும் தனி நிர்வாகத்தில் இருப்பதால், அப்பகுதிகளில் கழக நடவடிக்கைகளைச் செயல்படுத்த ஒரு 'நிர்வாகத் துணைக் குழு' ஏற்படுத்த பொதுச் செயலாளருக்குச் சிபாரிசு செய்தும், கழகப் பிரச்சாரம், சமூகப் பிரச்னைகள், நாட்டுப் பிரிவினை நடவடிக்கைகள் முதலியவைகளில் தஞ்சை—தென்னார்காடு மாவட்டங்களுடன் தனித்தனியே வட்டக் கழக அளவில் இணைந்து நீடிப்பது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வால்பாறை வட்டார தி.மு. கழகம்

6—9—55 இரவு 8 மணியளவில், வால்பாறை வட்டார தி மு. கழகச் செயற் குழுக் கூட்டம் தோழர் இ. ஜயாப்பிள்ளை தலைமையில் நடைபெற்றபோது, 25-9-55ல்; வால்பாறை வட்டார தி மு. கழக அலுவலகம் திறப்பது என்றும், கோவை மாவட்டச் செயலாளரால் வால்பாறை வட்டாரத்திற்கு அனுப்பப்படும் தோழர் வேலவன் அவர்களை வட்டாரச் செயலாளராக ஏற்றுக்கொள்வதெனவும், மேற்படி திறப்பு விழா செலவுக்காக வால்பாறை வட்டாரத்திலுள்ள கிளைகள் ஒவ்வொன்றும் ரூ. 15 வீதம் 19—9—55-க்குள் தோழர் ஜெ தானியேலிடம் கொடுக்க வேண்டுமெனவும், 25—9—55 காலை 10 மணிக்கு வால்பாறை வட்டார தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம் தோழர் ஈ. வெ. கி. சம்பத் முன்னிலையில் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டதுடன், மற்றும் பல முக்கிய முடிவுகளும் செய்யப்பட்டன.

புதுப்பாளையம் தி. மு. க.

8—9—55ல், இராசபாளையம்—புதுப்பாளையம் தி மு. க., சமதர்ம படிப்பகச் செயற்குழுக் கூட்டம் தோழர் எ. எம். முத்து தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் எம். எஸ் கே. சாமி, ஜி எஸ். மணி, ச. முத்துசாமி ஆகியோர் தி. மு. கழகக் கொள்கை பற்றிப் பேசினர். பின்னர் தி. மு. கழக 7-வது ஆண்டு விழாவும், பொதுக்கூட்டமும் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

ஆற்று நீர் பற்றி

மாநிலங்களிடையே தகராறு

தீர்த்து வைக்க விசாரணைக் குழு

புதுடில்லி, செப். 9—

மாநிலங்களுக்கிடையே ஆற்று நீரை உபயோகித்துக்கொள்ளுவது பற்றி எழும் தகராறுகளைத் தீர்த்து வைப்பதற்காக ஒரு மத்திய நியாய விசாரணைக் குழு அமைப்பது குறித்த மசோதா ஒன்றினை திட்ட மந்திரி குல்ஜாரிலால் நந்தா 'ராஜ்யங்கள் சபை'யில் கொண்டுவந்தார்.

மசோதாவினை ஒரு கூட்டுப் பொறுக்குக் குழுவிற்கு விட வேண்டும் என்று கோரிய அவர், பெரியாறு நீரை உபயோகித்துக் கொள்வதில், சென்னை, திரு-கொச்சி சர்க்காருக்கும், துங்கபத்திரா அணைக்கட்டு நீரை உபயோகித்துக்கொள்வதில் ஆந்திரா—மைசூர் சர்க்கார்களுக்குமிடையே எழுந்துள்ள தகராறுகளைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

செய்திச் சுருள்

★

புதுவையில் தி. மா. மு. கழகத் தோற்றம்

7—9—55 மாலை 5 மணியளவில், புதுவை தி. மு கழகத்தில், தோழர் ச. சிவப்பிரகாசம் முன்னிலையில், திராவிட மாணவர் முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றது.

தோழர் ச. சிவப்பிரகாசம், தி. மா. மு. கழக அவசியம் பற்றியும், மாணவர்கள் ஆற்ற வேண்டிய கடமை பற்றியும் பேசிய பின், தோழர் தமிழரங்கனைச் செயலாளராகக் கொண்ட கழக நிர்வாகக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

திருவள்ளுவர் நினைவுநாள் பொதுக்கூட்டம்

28—8—55 மாலை 4 மணிக்கு இலங்கை—கொழும்பு, லேயார்ட்ஸ் பிராட்வே நாராயண குரு மண்டபத்தில், இலங்கை தி. மு. கழகக் கொழும்புக் கிளையின் சார்பில் தோழர் எம். ஐ இராசமணி தலைமையில் நடைபெற்ற திருவள்ளுவர் நினைவு நாள் பொதுக்கூட்டத்தில், திருவள்ளுவர் தினத்தை அரசாங்கப் பொதுவிடுமுறையாக்கும்படி அரசாங்கத்தை வேண்டிக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தைத் துவக்கிவைத்துத் தோழர் ஏ. எஸ். மணவைத்தம்பி பேசினார். பின்னர் தோழர்கள் நா. பழநிநாதன், பா ச. கீதம், சி. தலுவத்தை (சிங்களத் தோழர்) ஆனந்தீஸ்வரி சுப்பிரமணியம், தோழர் இரா. அதிமணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கல்லக்குடி நடராசன் நினைவுப் படிப்பகம்

மதுரை—

7—9—55 இரவு 10-30 மணியளவில் தோழர் அ. குருசாமி தலைமையில் நடைபெற்ற படிப்பக உறுப்பினர் கூட்டத்தில், படிப்பக வரவு-செலவுக் கணக்குகள் சரி பார்க்கப்பட்டதுடன், மன்றத்தின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு நடக்காத சிலரை அதிகாரபூர்வமாக நீக்கிவைத்தும், இத்திங்கள் 18-ம் நாள் வட்டாரத்தில் உள்ள பல பகுதிகளில் கழகக் கொடியேற்றி திராவிடநாடு பிரிவினை நாள் கொண்டாடுவதெனவும் முடிவு செய்யப்பட்டு, கோவா போராட்டத்தில் உயிர் நீத்த தோழர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

****

தலைமைக் கழகம்: அறிக்கை—27/55

தி. மு. கழக ஆண்டு விழாவும்— நாட்டுப் பிரிவினை வாரமும்

திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றங்கொண்டு, ஆறு ஆண்டுகளைக் கடந்து, ஏழாவது ஆண்டில் அடி எடுத்துவைக்கும் பெருமைகொள் விழா 17—9—55-ஆம் நாளன்று நடைபெறவிருக்கிறது.

17—9—55-ஆம் நாளிலிருந்து 23—9—55-ஆம் நாள் வரையிலுள்ள ஒரு வார காலத்தைத் திராவிட நாடு பிரிவினை வாரமாகக்கொண்டு, தி. மு. கழக ஆண்டு விழாவை மிகச் சீரிய முறையில், ஆங்காங்குள்ள தி. மு. கழகக் கிளைகளும், தி. மு. கழகத்திற்குச் சார்புடைய அமைப்புகளும் கொண்டாடுவனவாக!

தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கியும், கழகம் ஆற்றிய தொண்டுகளை எடுத்துக்கூறியும், திராவிட நாட்டுப் பிரிவினைத் திட்டத்தை வலியுறுத்திச் சொல்லியும் துண்டு அறிக்கைகள் வெளியிட்டு—தட்டிகள் எழுதி வைத்து—ஊர்வலங்கள் நடத்தி—பொதுக்கூட்டங்கள் கூட்டிக் கழகத் தோழர்கள் கொண்டாடுவார்களாக!

இயன்றால் கொள்கை விளக்க இசையரங்குகளும்—நாடகங்களும் இலவசமாக நடத்திக்காட்டுவார்களாக!

'அறிவகம்', சென்னை-13
27—8—55

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

****

வாணியம்பாடி நகரசபைத் தேர்தல்

போட்டியின்றி கழகத் தோழர் வெற்றி பெற்றார்

வாணியம்பாடி நகர சபைத் தேர்தலில், நகர தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர் தோழர் பி. இலட்சுமணன் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரது தொகுதியில் காங்கிரஸ் அரிஜன சங்கத்தைச் சேர்ந்த திரு. அழகேசன் என்பவரும், ஷெட்யூல்ட் பெடரேஷன் கட்சியைச் சார்ந்த திரு சி. அப்பாதுரையும் போட்டியிட்டிருந்தனர். ஆனால், தோழர் இலட்சுமணன் போட்டியிடுவதாகத் தெரிவித்தவுடன், தாங்கள் போட்டியிடுவதை நிறுத்திக் கொண்டு தோழர் இலட்சுமணனுக்கு ஆதரவு தந்தனர். (ந-நி.)

சங்கரன்கோயில்நெசவாளர் பொதுக்கூட்டம்

6—9—55 இரவு 8 மணிக்கு, திருவேங்கடம் சாலை வீதியில், கைத்தறி நெசவாளர் சங்க ஆதரவில், திரு அ நாராயணன் தலைமையில் நடைபெற்ற நெசவாளர் பொதுக்கூட்டத்தில், தோழர்கள் எம். ஆறுமுகம், இரா. பழனிவேலு, எஸ். கிருட்டிணன், ஆ. ராமையா, ஞானமூர்த்தி ஆகியோர் நெசவாளர்களுக்கு அதிகக் கூலி கொடுக்கவேண்டிய அவசியம்பற்றி பேசினர். பின்னர் கோவா படுகொலையைக் கண்டித்தும், உயிர் நீத்தத் தியாகிகளுக்கு அனுதாபம் தெரிவித்தும், அடக்குமுறைகளைக் கண்டித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன், தறிக்காரர்களுக்கு உழைப்பிற்குத் தக்க கூலி கொடுக்க மாஸ்டர் வீவர்களையும், ரிபேட் திட்டத்தை மாற்றி, ரிபேட் பணத்தை நெசவாளர்களுக்கு நெசவின் கூலியாகக் கொடுக்க சம்மந்தப்பட்ட அதிகாரிகளையும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

டி. ஐ. சைக்கிள் பாக்டரி தொழிலாளர் யூனியன்

1—9—55 காலை 9 மணிக்கு, சென்னை-அம்பத்தூர் சைக்கிள் பாக்டரி தொழிற்சாலைக்குள், பாக்டரி அதிகாரி ஒருவர் தோழர் கே. நாராயணன் என்பவரை அடித்ததை முன்னிட்டு, தொழிலாளர்களும், அலுவலக அதிகாரிகளும் சாத்வீக முறையில் சத்தியாக்கிரகம் மேற்கொண்டிருந்தனர். இது விஷயம் குறித்து, தொழில் துறை கமிஷனரும், தொழில் அதிகாரியும் உடனே தலையிட்டு, 4—9—55ல், சுமூகமான முறையில் சமரசம் செய்து, மற்றும் பல பிரச்சினைகள் பற்றி தக்க நடவடிக்கை எடுப்பதாக அதிகாரிகள் தெரிவித்ததினால் சத்தியாக்கிரகம் 5–9–55ல், கைவிடப்பட்டதாக, மேற்படி பாக்டரி தொழிற்சங்கத் தலைவர் திரு. ஜி. எம். மதுரையார் அறிவிக்கிறார்.

புகைவண்டி நிலையத்தில் மறியல் நிறுத்தம்

திருப்பத்தூர் தாலுகா விவசாயிகள் சங்கக் காரியதரிசியும், வாணியம்பாடி தி. மு. கழகத் துணைச் செயலாளருமான தோழர் வி. என், தத்தப்பன் தலைமையில் ஜோலார்பேட்டை புகைவண்டி நிலையத்தில் உள்ள இரயில்வே உணவு விடுதியில் உணவு, சிற்றுண்டி, காபி, இவைகளின் விலை குறைக்கச் செய்ய, 2—10—55ல் மறியல் செய்வதாக இருந்தது; இதற்கு முன், 10—8—55ல், இரயில்வே இலாகாவுக்கு, தோழர் வி. என். தத்தப்பன், விலை குறைப்புச்செய்ய மறியல் செய்வதாக 'நோட்டீஸ்' கொடுத்துள்ளார்; 3 வருடமாக விலை குறைப்பு விஷயமாகக் கடிதப் போக்குவரத்தும் செய்துள்ளார்; இப்பொழுது இரயில்வே உணவு விடுதிகளில், உணவு, சிற்றுண்டிகளின் விலையைக் குறைப்பதாக அறிக்கை கிடைத்தது; எனவே, 2—10—55ல் மறியல் செய்வதில்லை என முடிவு செய்யப்பட்டு, மறியலும் நிறுத்தப்பட்டது. மறியலுக்கு 500 தொண்டர்கள் ஆயத்தமாய் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந. நி.)

கிழக்கு — மேற்கு முட்டுக் கட்டை!

தீர்ப்பதற்கு பேச்சுவார்த்தை

மேற்கு ஜெர்மன் அதிபர் டாக்டர் அடினர், மாஸ்கோ சென்றுள்ளாராம்; விமான நிலையத்தில், அவரை, பிரதமர் புல்கானினும், அயல்நாட்டு அமைச்சர் மாலடோவும் வரவேற்றனராம்!

ஜெர்மன் பிரச்சினையில், கிழக்கத்தியர் — மேற்கத்தியரிடையே ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையைத் தீர்ப்பது பற்றி ரஷ்யத் தலைவர்களுடன் அவர் பேச்சுவார்த்தைகள் நடத்துவாராம்.

பேச்சுவார்த்தை ஆரம்பம்

புல்கானின், மாலடோவ், அடினர் ஆகியோரிடை, ஜெர்மனியை ஒன்றுபடுத்துவது பற்றி பேச்சுவார்த்தை ஆரம்பமானபோது, அடினர் குறிப்பிட்டார்:—

"பிளவு செய்யப்பட்ட ஜெர்மனி ஒன்றுபடாத வரையில், ஐரோப்பாவில் நிலையான சமாதானம் ஏற்படுவதற்கில்லை; ஆனால், நான்கு வல்லரசுகளுக்குப் புறம்பாக அது பற்றிப் பேசப்போவதில்லை;

"ஜெர்மன் யுத்தக் கைதிகளை ரஷ்யா விடுதலை செய்யாத வரையில், இரு தேசங்களுக்குமிடையே சுமூக உறவு ஏற்படுவதற்கு இயலாது; ரஷ்யாவுக்கு ஆத்திர மூட்டும் வகையில் நான் இதைக் கூறவில்லை."

அஞ்சல் நிலையங்கள் திறக்கக் கோரிக்கை

5,611 மனுக்கள் பரிசீலனையில் இருக்கிறதாம்!

புதுடில்லி, செப். 9—

"கிராமப் பகுதிகளில் புதிய அஞ்சல் நிலையங்கள் திறக்கக் கோரி 5,611 மனுக்கள் வந்துள்ளன; அவைகள், பரிசீலனையில் இருக்கின்றன; 1955–56ல், 4,836 புதிய அஞ்சல் நிலையக் கிளைகள் திறக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது," என்று மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

வாணியம்பாடியில் பொதுக் கூட்டம்

5—9—55ல், வாணியம்பாடி நகர நல கண்காணிப்புச் சங்கச் சார்பில் தோழர் ஆர். திருஞானம் தலைமையில் நடைபெற்றது. தோழர் க நெடுஞ்சோழன், வி. என். தத்தப்பன், ஆனந்தன், கே. என். கேசவன், எல். கோபால், ஆரோக்கியசாமி ஆகியோர் பேசினர். தோழர் வி. என். தத்தப்பன் பேசுகையில், விற்பனை வரி அதிகாரிகளின் போக்கு பற்றியும், 'இரயில்வே உணவு விடுதிகளில் சிற்றுண்டி சாப்பாடு அக விலையைக் கண்டித்தும் பேசினார்.

திருவள்ளுவர் மன்றம் (கேளம்பாக்கம்)

4—9—55ல், செங்கற்பட்டு மாவட்டத்தைச்சேர்ந்த கேளம்பாக்கத்திலுள்ள மேற்படி மன்ற 4-வது ஆண்டுவிழா திரு கஜபதி எம். எல். சி., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் அவர்கள் திருவள்ளுவர் படத்தைத் திறந்து 'இயல், இசை, நாடகம்' வகுத்தார். தோழர் கே ஏ. சொக்கலிங்கம் ஆண்டு அறிக்கை வாசித்தார். தோழர்கள் ஜீவபந்து டி. எஸ் ஸ்ரீபால், ஆ சமயவாயம், ஜி. கோதண்டராமன், எம். முத்துசாமி, ப. சுப்பிரமணியம், க. சோமசுந்தரம், ஆர். ஜனார்த்தனம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

இரா. நெடுஞ்செழியன் அறைகூவல்!

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

"திருச்சி மாவட்டத்தில் தமிழ் மொழியிலேயே இனி நிர்வாகம் நடைபெறும்; தமிழில் நிர்வாகம் நடத்த ஆர்வமும் நல்ல தமிழ் மொழி அறிவும் கொண்ட அதிகாரிகள் தேவை—என்று விளம்பரம் செய்து, மாநிலத்தில் உள்ள சர்க்கார் அதிகாரிகளில் அத்தகையோரைத் தேடிப்பெற்று, திருச்சி மாவட்டத்தில் நிர்வாகத்தைத் தமிழில் நடத்தச்சொல்லட்டும், சர்க்கார்; அப்போது தமிழ் மொழி நிர்வாகம் வெற்றிகரமாக நடைபெறுகிறதா, இல்லையா பார்க்கலாம்;

"அப்போதும் சரிவர நடைபெறவில்லையானால், என்னை திருச்சி மாவட்ட நிர்வாக அதிகாரியாக மூன்று மாதங்களுக்கு நியமனம் செய்யட்டும்; நான் கௌரவமாகவே சம்பளம் ஏதும் பெறாமல் வேலை செய்கிறேன்; தமிழ் மொழியில் நிர்வாகம் நடத்த முடியும் என்பதை நடத்திக் காட்டுகிறேனா, இல்லையா என்று சர்க்கார் பார்க்கட்டும்; இந்த அறைகூவலை சர்க்கார் ஏற்றுக்கொள்ளுமா?

"தமிழ் மொழியில் நிர்வாகம் நடத்த வேண்டுமானால், அதற்குரிய முயற்சிகளை சர்க்கார் எங்கே மேற்கொண்டது? தமிழ் மொழியில் நிர்வாகம் நடத்த, இப்போது நிர்வாக நடைமுறை வழக்கில் இருந்துவரும் ஆங்கில மொழிச் சொற்களுக்கு தமிழ்ச் சொற்கள் காணவும், மற்றும் கலை நுணுக்க, தொழில் நுணுக்கச் சொற்கள் காணவும் ஏற்பாடுகள் என்ன நடைபெற்றிருக்கின்றன? காலத்தோடு தமிழ் மொழி ஒன்றி வளர சர்க்கார் மேற்கொண்ட முயற்சிகள் எவை?

"இந்தி மொழி வளர்ச்சிக்காக—அதன் உபயோகத்தை அதிகரித்திருப்பதற்காக சர்க்கார் கஜானாவிலிருந்து ரூ. 12 இலட்சம் இதுவரை செலவிடப்பட்டிருக்கிறதே—தமிழ் மொழிக்கு எவ்வளவு செலவு செய்யப்பட்டது? கூறுவாரா, சர்க்கார்?

"ஏற்கனவே இருக்கிற கரந்தைத் தமிழ்க் கல்லூரியும், திருவையாறு தமிழ்க் கல்லூரியும் போதுமான ஆதரவு சர்க்காரிடமிருந்து கிடைக்காமையினால் உயிருக்கு ஊசலாடுகிற நிலையிலிருக்கின்றன; எப்படி, தமிழ் மொழி வளரும்?

"இந்தி இன்னும் 15 ஆண்டு காலத்திற்கும்—இப்போது, தரப்படும் சர்க்கார் ஆதரவு குறையாமலிருந்தால் ஓங்கி வளர்ந்த மொழியாக்கப்படவிருக்கிறது; இந்திமொழி அகராதி, இலக்கண நூல் இவைபோன்றவை தயாரிப்பதற்காகவும், கலை நுணுக்கச் சொற்கள் காணவுமாக இந்தியப் பேரரசு பல இலட்சம் ரூபாய் செலவிடுகிறது; அப்படி இந்தியை வளரவிட்டுவிட்டு, தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஏதும் செய்யாமலிருந்துவிட்டு, 'தமிழ் மொழி நிர்வாகம் வெற்றி பெறவில்லை' என்று, மந்திரி கூறுவது, என்ன நியாயம்?

"எனவே, இந்த மண்ணுக்கும், மக்களுக்கும் உரியதல்லாத மொழியான இந்தி, இந்த நாட்டில் சிறுகச் சிறுக, மறைமுகமாகத் திணிக்கப்பட்டு வருவதை உன்னிப்புடன் கவனித்து வரவேண்டியதுடன், வடவரின் ஆதிக்கக் கரம் வலுத்துவிடாதிருக்க, இந்தி மொழி புகுவதைத் தடுக்க முற்பட வேண்டும் என்பதுடன், மக்கள், இதுபற்றி எச்சரிக்கையாக—விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்,"

—என்று, பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சென்னை—மயிலை தி. மு. கழக ஆண்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

15,000 தொழிலாளர் அடையாள வேலை நிறுத்தம்

வெடிகுண்டு தொழிற்சாலையில் நடைபெறும்

புனா, செப். 9—

தொழிற் சங்கத்தில் பணிபுரியும் இரண்டு தொழிலாளத் தோழர்களை எவ்விதக் காரணமும் காட்டாமல் வேலையிலிருந்து நீக்கிவிடப்போவதாக அதிகாரிகள் தந்துள்ள 'நோட்டீசை' எதிர்த்து, கர்க்கியில் உள்ள வெடிகுண்டு தொழிற்சாலையைச் சேர்ந்த சுமார் 15,000 தொழிலாளர்கள், வரும் செப். 23-ந் தேதியன்று ஒரு நாள் 'அடையாள வேலை நிறுத்தம்' செய்ய முடிவெடுத்திருக்கின்றனராம்!

★

11,000 தொழிலாளர் வேலை நிறுத்தம்

இராபர்ட்சன்பேட்டை, செப். 11—

கடந்த வியாழன் முதல், கோலார் தங்கவயல் சுரங்கத் தொழிலாளர்களில் 11,000 பேர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சில தகராறுகள் சம்பந்தமாக சமீபத்தில், நிர்வாகத்தினரும்—தொழிலாளரும் செய்து கொண்ட சமரச உடன்படிக்கையை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று கோரி, இந்தக் காலவரம்பற்ற வேலை நிறுத்தத்தில் தொழிலாளர் ஈடுபட்டுள்ளனராம்.

சென்ற புதனன்று சாம்பியன் ரீப் சுரங்கத்தைச் சேர்ந்த 5,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்; மைசூர் தங்க சுரங்கத்தைச் சேர்ந்த 6,000 தொழிலாளர்கள் அன்றைக்கு மட்டும் தங்கள் கோரிக்கையை வற்புறுத்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்; ஆனால், அவர்களும் வியாழனிலிருந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுவிட்டனர்.

நந்திதுர்க்கம் தங்கச் சுரங்கத்தில் மட்டும் எல்லா தொழிலாளர்களும் வேலை செய்கின்றனர்.

'போராட்டம்: ஓயவில்லை'

புதுடில்லி, செப். 10—

"பஞ்சாப் மொழி பேசுகின்ற மக்களுக்குத் தனி மாகாணம் வேண்டுமென்ற போராட்டம் இன்னும் முடிந்துவிடவில்லை," என்று மாஸ்டர் தாராசிங், பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

சிறையிலிருந்துவிடுதலையடைந்த அவரை வரவேற்க நடைபெற்ற அக்கூட்டத்தில், போராட்டத்திற்கென ரூ. 5,000 அடங்கிய பண முடிப்பும், ஒரு கத்தியும் அவரிடம் அளிக்கப்பட்டது.

தி. மு. க. பொதுச்செயலாளர்

நெடுஞ்செழியன் காட்டுப்பாடி (வ.ஆ.) வருகை

பொதுச்செயலாளர் இரா.நெடுஞ்செழியன் அவர்களுக்கு, காட்டுப்பாடி (வ. ஆ. மாவட்டம்) பஞ்சாயத்து போர்டு சார்பில், 17—9—55 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு வரவேற்பளிக்கப்படும்.

மாலை 6 மணிக்கு, தி. மு. கழகச் சார்பில், தோழர் கிருட்டினராஜ் தலைமையில், நாட்டுப் பிரிவினை நாளும், தி. மு. கழக 7-ம் ஆண்டு விழாவும், காட்டுப்பாடி வ. உ. சி. பூங்கா வெளியில் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் பேசுவார்.

நாஞ்சில் மாவட்ட தி. மு. கழக (கிளை) நிர்வாகிகளுக்கு

"தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அவர்கள் அறிக்கைக்கு இணங்க, நாஞ்சில் மாவட்டத்தில், செப்டம்பர் 17-ம் நாள் (தி. மு. கழகத் துவக்க விழாவினை) வடசேரி தி. மு. கழக அலுவலகத்தில், 16—9—55 மாலை 5 மணிக்கு கொண்டாடுவதாக இருக்கிறது. அன்று, அண்ணா அவர்களின் சுற்றுப் பயண நிகழ்ச்சிகள் திட்டவட்டமாக முடிவு செய்யப்படும். கிளைக் கழக நிர்வாகிகளும், கழகத் தோழர்களும் அவசியம் அன்றைய நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வேண்டுகிறேன்,"

என்று, நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் வி.எம் ஜான் அறிவிக்கிறார்.

பொதுக்கூட்டம்

14—9—55 மாலை 6 மணிக்கு, சென்னை-சேப்பாக்கம், வெங்கடேச நாய்க்கன் தெருவில், டாக்டர் சி நடேசன் மன்றச் சார்பில், தோழர் கா. அப்பாதுரை தலைமையில் நடைபெறும் தோழர்கள் கே. ஆர் இராமசாமி, சி. வி. எம். அண்ணாமலை, என். ஏ. ரஷீத், சி. டி. சாரங்கபாணி, தோழியர் அலமேலு அப்பாதுரை ஆகியோர் பேசுவர்.

'இறுதிவரை போராடுவோம்'

நேசமணி அறிவிப்பு

எர்ணாகுளம், செப். 11—

"திருவாங்கூரில் உள்ள ஒன்பது தமிழ் 'தாலுகா'க்களும் தாய்த்தமிழகத்துடன் இணையும் வரை நாங்கள் ஓயமாட்டோம்;

"கேரள மாநிலம்—நான்கு மாநிலங்களை மட்டும் நீக்கிவிட்டு அமையப் போவதாக செய்தி பார்த்தேன்;

'தோவாளை, அகத்தீசுவரம், கல்குளம், விளவங்கோடு ஆகிய தென்கோடி 'தாலுகா'க்களை மட்டும் தமிழகத்துடன் சேர்க்கவும், இதர நெய்யாற்றின்கரை, தேவிகுளம், பீர்மேடு, சித்தூர் ஆகிய தமிழ் 'தாலுகா'க்களை கேரளத்திலேயே வைத்திருப்பதெனவும் மாநில புனரமைப்புக் குழு சிபாரிசு செய்தால், எல்லா தமிழ் 'தாலுகா'க்களும் தாய்த்தமிழகத்துடன் இணையும்வரை நாங்கள் தொடர்ந்து போராடுவோம்—கிளர்ச்சியை நிறுத்தமாட்டோம்,"

என்று திரு-தமிழகக் காங்கிரஸ் தலைவர், நேசமணி பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

★

தனி கேரள மாநிலம்...

ஐந்து தமிழ் வட்டங்கள் நீங்கலாக அமையும்?

திருவனந்தபுரம், செப். 11—

திரு-கொச்சியின் தென் கோடியில் உள்ள 5 தமிழ் 'தாலுகா'க்கள் நீங்கலாக, திரு-கொச்சி, மற்றும் சென்னை மாநிலத்தில் உள்ள மலபார் மாவட்டம், தென் கன்னட மாவட்டத்தில் உள்ள காசர்கோட் தாலுகா ஆகியவை உள்ளடங்கிய ஒரு கேரள மாநிலம் அமைக்க மாநில புனரமைப்புக் குழு உத்தேசித்திருப்பதாகத் தனக்குத் தகவல் கிடைத்துள்ளது என்று திரு-கொச்சி முதன் மந்திரி பனம்பள்ளி கோவிந்த மேனன் தெரிவித்திருக்கிறார்.

அவர் தகவலின்படி, திரு-கொச்சியில் உள்ள ஒன்பது தமிழ் 'தாலுகா'க்களில் 5 மட்டுமே தமிழகத்துடன் இணையும்போல் தோன்றுகிறது.

'மாநில புனரமைப்புக் குழு சிபாரிசு இறுதியான முடிவு அல்ல'

பண்டித நேரு கூறுகிறார்!

ரீவா செப். 11—

"மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகளே முடிவான தீர்ப்பு அல்ல; சிபாரிசுகளினால், பாதிக்கப்பட்ட மாநிலங்கள்—இறுதி முடிவு மேற்கொள்ளப்படு முன்னர் கலந்தாலோசிக்கப்படும்,"

என்று, பண்டித நேரு இங்கு தெரிவித்திருக்கிறார்.

மேலும் அவர், மாநில புனரமைப்புக் குழு என்ன சிபாரிசுகளைச் செய்யவிருக்கிறது என்பது தனக்குத் தெரியாது என்றும், என்ன சிபாரிசுகள் செய்யப்பட்டாலும் அவை நாட்டு மக்கள் முன் வைக்கப்படும் என்றும், அந்த சிபாரிசுகளை அமைதியான முறையில் அமுல் செய்ய சர்க்கார் முன்வரும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

மந்திரி சபை மீது 29 குற்றச்சாட்டுகள்!

2½ ஆண்டுகளில் நான்கு முறை நம்பிக்கையில்லாத் தீர்மானம்

நாகபுரி, செப். 10—

மத்திய பிரதேச சட்டசபையில், எதிர்க்கட்சி உறுப்பினரொருவர், பண்டித ரவிசங்கர் சுக்லா அமைச்சரவை மீது, 29 'குற்றச்சாட்டு'களைச் சுமத்தி கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் 20 ஓட்டுக்களை ஆதரவாகவும், 157 ஓட்டுக்களை எதிராகவும் பெற்று தோல்வியுற்றதாம். கடந்த 2½ ஆண்டுகளில் காங்கிரஸ் மந்திரி சபைக்கு எதிராக எதிர்க்கட்சியினர் மேற்கொண்ட நான்காவது முயற்சியாம் இது!

ஏழு மணி நேரம் நடைபெற்ற விவாதத்திற்குப் பின்னர், முதலமைச்சர் பதிலளிக்கையில், மீண்டும் மீண்டும் அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்திருப்பதின் மூலம் மாநிலத்தின் நலனுக்குத் தீங்கிழைக்கும் ஒரு சூழ்நிலையை எதிர்க் கட்சியினர் தோற்றுவித்திருப்பதாகக் கண்டித்தார்.

1953 ஜனவரியில் நடைபெற்ற போலீஸ் துப்பாக்கிப் பிரயோகத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு அளிப்பது பற்றி சர்க்கார் ஆலோசனை செய்துகொண்டிருக்கையில் சில 'சட்ட இடையூறு'கள் தோன்றியதென்றும், எதிர்க்கட்சியினர்தான் அதற்குப் பொறுப்பாளிகளென்றும் அவர் குறிப்பிட்டார்.

ஒரிசா வெள்ளப்பெருக்கு

30 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டனர்

ஒரிசாவில் ஒரு கிழமைக்குமுன் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால், 6,000 சதுர மைல் நிலப்பரப்பு வெள்ளத்தில் மூழ்கியதுடன், சுமார் முப்பது இலட்சம் மக்கள் அவதியுறுகின்றனர் என்று தெரிய வருகிறது.

ஒரிசாவின் மிக முக்கியமான நதிகளான மகாநதி, பைதரானி, பிராஹ்மினி முதலியவையும், அவற்றின் கிளை நதிகளும் வெள்ளப் பெருக்கெடுத்தன.

ஏற்பட்ட சேதங்களின் அளவும் பாதிக்கப்பட்ட மக்களின் துயரங்களின் அளவும் இன்னமும் திட்டவட்டமாகக் கணக்கிடப்படவில்லை; ஏனெனில், பல பாதிக்கப்பட்ட பகுதிகளுடன் இன்னும் போதுமான போக்குவரத்துத் தொடர்பு ஏற்படவில்லை; கடந்த ஒன்பது நாட்களாகத் தொடர்ந்து ஓடிக்கொண்டிருந்த வெள்ளப்பிரவாகம் இன்றுதான் வடிய முற்பட்டிருக்கிறது. எனினும் சீக்கிரமே எல்லா வகையான போக்குவரத்துத் தொடர்புகளும் புதுப்பிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாயும் சர்க்கார் வெளியிட்டுள்ள குறிப்பு கூறுகிறது.

திருமணம்

14—9—55 காலை 7 மணிக்கு, திருமலாபுரம் மணமகன் இல்லத்தில், தோழர் கே. பி. ராஜகோபாலன்—தோழியர் ராஜம்மாள் திருமணம் நடைபெறும்.

'புகார்களுக்கு ஆதாரமில்லை'

நிதி அமைச்சர் கூறுகிறார்

சென்னை, செப். 10—

"அனந்தப்பூர் எஞ்சினீயரிங் கல்லூரியில் படிக்கும் தமிழ் மாணவர்கள், அங்கு தாங்கள் படிப்பதற்குத் தகுந்த சூழ்நிலை இல்லையென்று கூறும் புகார்களுக்கு ஆதாரமில்லையென்றே நான் நினைக்கிறேன்; சென்னைக்குப் போய்விட வேண்டுமென்ற ஆவலினாலேயே தமிழ் மாணவர்கள் இப்புகாரைக் கூறியிருக்கலாம்,"

என்று, சென்னை நிதி அமைச்சர் சுப்பிரமணியம், அங்கு தமிழ் மாணவர்கள் நடத்தப்படும் முறையை நேரில் கண்டறியச் சென்றுவிட்டு சென்னை திரும்பியதும் கூறியுள்ளார்.

சென்னை எஞ்சினீயரிங் கல்லூரிக்குத் தங்களை மாற்றிவிட வேண்டுமென்ற கோரிக்கையை மாணவர்கள் வற்புறுத்தவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை பல்கலைக் கழகப் பட்டத்தைத் தங்களுக்குத் தர வேண்டுமென மாணவர்கள் கோருவது பற்றி சர்க்கார் பரிசீலனை செய்து வருகிறதென்றும், இது பற்றி சென்னையில் கலைக் கழகத்திற்கு எழுதப்பட்டு பதில் எதிர்பார்க்கப்படுகிறதென்றும் அவர் கூறியுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.